ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2086/35 - 2018 අගෝස්තු මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.08.30
2086/35 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வடமேல் மாகாண மாகாண சபை

வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் ........... இலக்கத்திற்கான வடமேல் மாகாண மனிதவள அபிவிருத்தி அதிகாரம் பற்றிய சாசனத்தின் திருத்தம்

இங்கு கீழே பிரசுரிக்கப்படுகின்ற வடமேல் மாகாண மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் ……… இலக்கத்திற்கான வடமேல் மாகாண மனிதவள அபிவிருத்தி அதிகாரம் பற்றிய திருத்தியமைத்த சாசனத்தினை இன்றைய திகதி தொடக்கம் முப்பது நாட்கள் கடந்த பின்பு வடமேல் மாகாணத்தின் மாகாண சபைக்கு சமர்ப்பிப்பதாக இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன். எவர் ஒருவருக்கு இச் சாசனத்தில் அடங்கியுள்ள சட்டத்திட்டங்கள் பற்றி சமர்ப்பிப்பதற்கு ஏதாவது விடயங்கள் இருந்தால் அதனை அத் திகதிக்கு முன் என்னிடத்தில் சமர்பிக்க வேண்டும்.

டீ.ஜீ.பி.எம். தர்மசிரி தசநாயக்க,
வடமேல் மாகாண சபையின் முதலமைச்சரும்
நிதி மற்றும் திட்டமிடல், பொறியியல் சேவை, நீதியும் சமாதானமும், கல்வி,
உள்ளூராட்சி மற்றும் மாகாண நிருவாக, பொருளாதார அபிவிருத்தி,
சுற்றாடல் அலுவல்கள், நீர் விநியோக மற்றும்
வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலா நடவடிக்கை அமைச்சர்.

வடமேல் மாகாண சபையின் முதலமைச்சும்
நிதி மற்றும் திட்டமிடல், பொறியியல் சேவை, நீதியும் சமாதானமும், கல்வி,
உள்ளூராட்சி மற்றும் மாகாண நிருவாக, பொருளாதார அபிவிருத்தி,
சுற்றாடல் அலுவல்கள், நீர் விநியோக மற்றும்
வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலா நடவடிக்கை அமைச்சு,
1 ஆம் மாடி,
வடமேல் மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்.

1A - PG 4196 — 42 (2018/08)
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## வடமேல் மாகாண மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் ....... இலக்க வடமேல் மாகாண மனித வள அபிவிருத்தி அதிகார சபை (திருத்த) சாசனம்

வடமேல் மாகாண மாகாண சபையில் 1994 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கத்திற்கான வடமேல் மாகாண மனித வள அபிவிருத்தி அதிகார சபையின் சாசனத்தினை திருத்தியமைப்பதற்கான சாசனமாகும்

சுருக்கப் பெயரும் நடைமுறைப்படுத்தப் படும் திகதியும்.

01. இச் சாசனம் 2018 ஆம் ஆண்டின் …….. ஆம் இலக்கத்திற்கான வடமேல் மாகாண மனிதவள அபிவிருத்தி அதிகார சபை (திருத்த) சாசனமாக அறிமுகப்படுத்துவதுடன் ஆளுநர் அவர்களது அனுமதி கிடைத்த திகதி தொடக்கம் செயல்படுத்தப்படும்.

1994 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கத் திற்கான சாசனத் தின் 6 ஆம் உறுப்புறுரையினை திருத்தம் செய்தல்

02. (இங்கு இதன் பின்பு “பிரதான சாசனம்” என்று குறிப்பிடுவது) 1994 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்கத்திற்கான வடமேல் மாகாண மனித வள அபிவிருத்தி அதிகார சபையின் சாசனத்தில் 6 ஆம் உறுப்புரையினை அகற்றி அதற்கு பதிலாக கீழ்க் காட்டப்பட்டுள்ள உறுப்புரையினை மாற்றீடு செய்வதனால் அவ் உறுப்புரை இவ்வாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

6.1 அதிகார சபைக்காக இதன் பின்பு பணிப்பாளர்களாக குறிப்பிடப்படுகின்ற கீழ்க் காட்டப்பட்டுள்ள உறுப்பினர்களினால் உள்ளடக்கப்பட்ட பணிப்பாளர் குழுவினர்கள் உள்ளடங்க வேண்டும்.

(அ) பிரதம செயலாளரின் முகவர் ஒருவர்.

(ஆ) விடயப் பொறுப்புடைய அமைச்சின் செயலாளரின் முகவர் ஒருவர்.

(இ) மாகாணத்தில் கல்விப் பணிப்பாளர் அல்லது அவரின் முகவர் ஒருவர்.

(ஈ) மாகாணத்தின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்.

(உ) விடயப் பொறுப்புடைய அமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற மூன்று உறுப்பினர்கள்.

(2) பணிப்பாளர்களிடையே ஒரு பணிப்பாளர் விடயப் பொறுப்புடைய அமைச்சரினால் அதிகார சபையின் தலைவராக நியமிக்கப்பட வேண்டியதுடன் தலைவர் அங்கு தலைமை நிர்வாகியாவார்.

(3) உறுப்பினர்களிடையே ஒருவர் விடயப் பொறுப்புடைய அமைச்சரின் இணக்கத்துடன் பணிப்பாளர் குழுவினால் அதிகார சபையின் நிர்வாகப் பணிப்பாளராக நியமிக்க முடியும்.

பிரதான சாசனத் தில் 9 (5) ஆம் உப பிரிவினை திருத்தம் செய்தல்.

03. பிரதான சாசனத்தில் 9 ஆம் உறுப்புரையில் (5) ஆம் உப பிரிவினை இத்துடன் அகற்றுவதுடன் அதற்குப் பதிலாக கீழ்க் காணப்படும் உறுப்புரையினை மாற்றீடு செய்வதனால் இவ் உறுப்புரை திருத்தம் செய்யப்படுகின்றது.

(5) எல்லாப் பணிப்பாளர் குழுக் கூட்டத்தின் போதும் அதன் தலைமையினை தலைவர் ஏற்க வேண்டியதுடன், அவர் இல்லாத சந்தர்ப்பத்தில் பணிப்பாளர் குழுவினால் தற்காலிகமாக தலைவர் ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டும்.

பிரதான சாசனத் தில் 11 ஆம் உப பிரிவினை திருத்தம் செய்தல்.

04. பிரதான சாசனத்தில் 11 ஆம் உறுப்புரையினை இத்துடன் அகற்றுவதுடன், அதற்குப் பதிலாக கீழ்க் காணப்படும் உறுப்புரையினை மாற்றீடு செய்வதனால் இவ் உறுப்புரை திருத்தம் செய்யப்படுகின்றது.

11. அதிகார சபையில் கடமையில் ஈடுபடுவதற்காக தலைவர், நிர்வாக பணிப்பாளர் மற்றும் பணிப்பாளர் குழுவின் உறுப்பினர்களிடத்தில் அமைச்சரினால் தீர்மானிக்கப்படுகின்ற ஊதியம் செலுத்த முடியும்.

பிரதான சாசனத் தில் 12(1) ஆம் உப பிரிவினை திருத்தம் செய்தல்.

05. பிரதான சாசனத்தில் 12 ஆம் உறுப்புரையில் (1) ஆம் இலக்கத்திற்கான உப பிரிவினை இத்துடன் அகற்றுவதுடன், அதற்குப் பதிலாக கீழ்க் காணப்படும் உறுப்புரையினை மாற்றீடு செய்வதனால் இவ் உறுப்புரை திருத்தம் செய்யப்படுகின்றது.

1. அதிகார சபையின் பொது முத்திரை தலைவரின் பொறுப்பில் இருத்தல் வேண்டும்.

06. பிரதான சாசனத்தில் 14 ஆம் உறுப்புரையினை இத்துடன் அகற்றுவதுடன், அதற்குப் பதிலாக கீழ்க் காணப்படும் உறுப்புரையினை மாற்றீடு செய்வதனால் இவ் உறுப்புரை திருத்தம் செய்யப்படுகின்றது. பிரதான சாசனத்தில் 14 ஆம் உப பிரிவினை திருத்தம் செய்தல்.

14. அதிகார சபையில் பொது முகாமையாளர் பணிப்பாளர் குழுவின் செயலாளராக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

07. பிரதான சாசனத்தில் 15 ஆம் உறுப்புரையினை இத்துடன் அகற்றுவதுடன், அதற்குப் பதிலாக கீழ்க் காணப்படும் உறுப்புரையினை மாற்றீடு செய்வதனால் இவ் உறுப்புரை திருத்தம் செய்யப்படுகின்றது. பிரதான சாசனத்தில் 15 ஆம் உப பிரிவினை திருத்தம் செய்தல்.

15. (1) அதிகார சபையின் தலைவர் பணிப்பாளர் குழுவின் தலைவராவதுடன், சாசனத்தின் நோக்கத்தினை அடைவதற்காக அதிகார சபையினை கொண்டு நடாத்தல் அவரின் பணிப் பொறுப்பாகும்.

(2) நிர்வாகப் பணிப்பாளர் அவர்கள் பணிப்பாளர் குழுவினரினால் பொறுப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்ற வேண்டியதுடன் அப் பணிகளை நிறைவேற்றுவது பற்றி தலைவர் மற்றும் பணிப்பாளர் குழுவிற்கு அவர் பொறுப்பு கூற வேண்டும்.

08. பிரதான சாசனத்தில் 16 ஆம் உறுப்புரையினை இத்துடன் அகற்றுவதுடன், அதற்குப் பதிலாக கீழ்க் காணப்படும் உறுப்புரையினை மாற்றீடு செய்வதனால் இவ் உறுப்புரை திருத்தம் செய்யப்படுகின்றது. பிரதான சாசனத்தில் 16 ஆம் உப பிரிவினை திருத்தம் செய்தல்.

16. (1) இச் சாசனத்தின் அதிகாரம் மற்றும் பணிகளை நடைமுறைப்படுத்துவதற்காக பணிப்பாளர் சபையினால் பொது முகாமையாளர் ஒருவரை நியமிக்க வேண்டும். பொது முகாமையாளரின் பணிப் பொறுப்பு.

(2) பொது முகாமையாளருக்கு உதவிக்காக நிருவாக உத்தியோகத்தர், கணக்காளர், கள உத்தியோகத்தர் உட்பட மற்றைய உத்தியோகத்தர்களும் உள்ளடங்கப்பட்ட பணிக் குழுவாக இருத்தல் வேண்டும். உதவிப் பணிக் குழு.

(3) பொது முகாமையாளர் அதிகார சபையின் பணிகளை மேற்பார்வை செய்தல், கட்டுப் படுத்தல் மற்றும் நிர்வகித்தல் பற்றி தலைவர் மற்றும் பணிப்பாளர் குழுவிற்கு பொறுப்புக் கூற வேண்டும். பொது முகாமையாளரின் பணிப் பொறுப்பு.

(4) அதிகார சபையின் தலைவர் நியமன அதிகாரி ஆவதுடன், ஒழுக்காற்று அதிகாரி பணிப்பாளர் குழுவாகும். விடயப் பொறுப்புடைய அமைச்சின் செயலாளர் முறையீடுகளின் பொறுப்பதிகாரியாவார். நியமன அதிகாரி, ஒழுக்காற்று அதிகாரி, முறையீட்டு அதிகாரி.

09. பிரதான சாசனத்தில் 18 (2) (இ) ஆம் உப உறுப்புரையினை இத்துடன் அகற்றுவதுடன், அதற்குப் பதிலாக கீழ்க் காணப்படும் உறுப்புரையினை மாற்றீடு செய்வதனால் இவ் உறுப்புரை திருத்தம் செய்யப்படுகின்றது. பிரதான சாசனத்தில் 18(2) இ ஆம் உப பிரிவினை திருத்தம் செய்தல்.

18. (2) (இ) I. வடமேல் மாகாணத்தினுள் தற்போது நிறுவப்பட்டுள்ளதும் எதிர்காலத்தில் நிறுவப்படுகின்றதுமான மனித வள அபிவிருத்தி பணியில் ஈடுபடுகின்ற எல்லா நிறுவனங்களும் பதிவு செய்து மாகாணத்தின் தேவைகளுக்குப் பொருந்தும் வகையில் அவற்றின் நடவடிக்கைகளை நிர்வகித்தல், பாடநெறி வளர்ச்சிக்காக ஆலோசனை வழங்குதல் மற்றும் நிதிசார்புடைய அல்லது வேறு வகையில் உதவி புரிதல், நிறுவனத்தைக் கொண்டு நடாத்தும் காலத்தினை தீர்மானித்தல். 18(2) (இ) ஆம் உப பிரிவினை திருத்தம் செய்தல்.

II அரச, அரை அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்காக உகந்த சேவையினை வழங்குவதனால் மாகாணத்தில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு உரிய செயற்திட்டத்தினை செயற்படுத்தல்.

IV ஆம் பகுதி

**பிழை மற்றும் தண்டனை**

பிரதான சாசனத் திற்கு நான்காவது பகுதியினை உட் படுத்தல்.

10. பிரதான சாசனத்திற்கு உரிய சாசனத்தின் நான்காவது பகுதியாக கீழ்க் காணப்படும் உறுப்புரை உட்படுத்தப் படும்.

தவறுகள்.

27. (அ) i. இச் சாசனத்தின் கீழ் அல்லது இச் சாசனத்தின் பணிகளுக்காக அல்லது இச் சாசனத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள ஏதாவதொரு விதிமுறை அல்லது ஆணையின் கீழ் அமைக்கப்பட்ட அல்லது வழங்கப்படுகின்ற ஏதாவதொரு அறிக்கை அல்லது வேறு ஆவணங்களினால் தெரிந்து தெரிந்தே ஏதாவதொரு பொய்யான அல்லது பிழையான தகவல் தெரிவிக்கின்றதும்,

ii. இச் சாசனத்தில் விதிக்கப்பட்டுள்ள ஏதாவதொரு தகவல் அல்லது அறிக்கையினை வழங்குவதற்கு தவறுகின்ற அல்லது நிராகரிக்கின்றதும்,

iii. தலைவரின் ஆலோசனைக்கோ விதியிற்கோ வழிகாட்டலிற்கோ கட்டளையிற்கோ சாதாரண காரணம் இன்றி தவறுகின்றதும்,

iv. இச் சாசனத்தினால் அல்லது அதன் கீழ் அமைக்கப்பட்ட ஏதாதொரு கட்டளையினால் எவரொருவரிடத்தில் ஒதுக்கப்பட்டுள்ள அல்லது ஒதுக்கப்படுகின்ற ஏதாவதொரு அதிகாரம், செயற்பாடுகள் அல்லது பணிகளை செயற்படுத்தப்படும் போது அல்லது நிறைவேற்றும் போது உரியவருக்கு ஏதும் தடைகள் அல்லது இடையூறுகள் செய்கின்றதும்,

v. இச் சாசனத்தில் அல்லது அதன் கீழ் அமைக்கப்பட்ட ஏதாவதொரு கட்டளையினை அல்லது விதியினை அல்லது மீறுகின்ற அல்லது அவ்வாறு செயற்படுவதனை வேண்டுமென்றே தவறுகின்ற மற்றும் /அல்லது வேண்டுமென்றே தடை செய்கின்றதும்,

எவர் ஒருவரும் இச் சாசனத்தின் கீழ் குற்றத்திற்கு குற்றவாளியாவார்.

அபராதம்.

27. (ஆ) இச் சாசனத்தின் விதிகள் அல்லது கட்டளைகளை மீறுகின்ற எவர் ஒருவரையும் நீதவான் முன்னிலையில் நடாத்தப்படுகின்ற வழக்குப் பதிவின் போது குற்றத்திற்கு குற்றவாளியான சந்தர்ப்பத்தில் ஐம்பதாயிரம் ரூபா (ரூ.50,000) அபராத தொகைக்கு அல்லது ஒரு ஆண்டிற்கு மேற்படாத காலத்திற்கு சிறைத் தண்டனைக்கு அல்லது இரு தண்டனையில் ஒரு தண்டனைக்கு அல்லது இரு தண்டனைகளுக்கும் உட்படுத்தப்படுவர்.

V ஆம் பகுதி

**சொல் பற்றிய விளக்கம்**

பிரதான சாசனத்தில் 27 மற்றும் 28 ஆம் உறுப்புரைகளை அகற்றுதலும் V பகுதியினை உட் படுத்தலும்.

11. பிரதான சாசனத்தில் 27 மற்றும் 28 ஆம் உறுப்புரைகள் அகற்றப்படுவதுடன், அதற்காக கீழ்க் காணப்படும் உறுப்புரை மாற்றீடு செய்வதனால் அவ் உறுப்புரை இத்துடன் திருத்தம் செய்யப்படுகின்றது.

விளக்கம்.

28. இச் சாசனத்தில் சொல் சம்பந்தமாக விளக்கம் தேவைப்படின்,

“அமைச்சர்” என்பவர் வடமேல் மாகாண சபையின் விடயப் பொறுப்புடைய அமைச்சரும்,

“பிரதம செயலாளர்” என்பவர் வடமேல் மாகாணத்தின் பிரதம செயலாளரும்,

“செயலாளர்” என்பது விடயப் பொறுப்புடைய அமைச்சரின் செயலாளரும்,

"மாகாணக் கல்விப் பணிப்பாளர்" என்பவர் வடமேல் மாகாணத்தின் மாகாண கல்விப் பணிப்பாளரும்,

"கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்" என்பவர் வடமேல் மாகாணத்தின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,

"தலைவர்" என்பவர் மனிதவள அபிவிருத்தி அதிகார சபையின் நிர்வாகப் பணிப்பாளரும்,

"தலைமைப் பணிப்பாளர்" என்பவர் மனிதவள அபிவிருத்தி அதிகார சபையின் தலைமைப் பணிப்பாளரும்,

"பொது முகாமையாளர்" என்பவர் மனிதவள அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளரும்,

"மாகாண சபை" என்பது வடமேல் மாகாண மாகாண சபையும்,

"மாகாணம்" என்பது இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் வடமேல் மாகாணம் என்று கருதப்படும்.

29. இக் கொள்கைப் பிரகடனத்தில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் சந்தர்ப்பத்தில், சிங்கள மொழியில் குறிப்பிடப்பட்டுள்ளதே ஏற்றுக் கொள்ளப்படும். ஒவ்வாமை ஏற்படும் சந்தர்ப்பம்.

9 - 366

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.